වාර්ෂික වාර්තාව

**ஆண்டறிக்கை**

# ANNUAL REPORT 2017

## ඉඩම් මැනුම් සභාව
**நில அளவைச் சபை**
**Land Survey Council**

.

**ඉඩම් මැනුම් සභාව, සර්වේයර් ජනරාල් කාර්යාලය,අංක150, කොළඹ 05**
**நில அளவைச் சபை, நில அளவையாளர் அதிபதி அலுவலகம்,இல.150 பெர்னாட்கொழும்பு 05**
**Land Survey Council, Surveyor General’s Office,No 150, Colombo 05**

**உள்ளடக்கம்**


| | | |
|---|---|---|
| 1. | தலைவர் அவர்களின் செய்தி | 03 |
| 2. | தொலைநோக்கு மற்றும் செயற்பணி | 05 |
| 3. | நில அளவைகள் சபை | 06 |
| 4. | நில அளவைகள் சபையின் பணிகள் | 07 |
| 5. | நில அளவைகள் சபைக்கு உரித்தான அதிகாரங்கள் | 08 |
| 6. | 2017 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையின் செயலாற்றுகை | 09 |
| 7. | நில அளவைகள் சபையின் அலுவலர் குழாம் | 11 |
| 8. | செயற்பாடுகள் | 11 |
| 9. | கற்கை மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் | 16 |
| 10. | நிதி முகாமைத்துவம் | 18 |

11. 2017 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குக் கூற்றுக்கள் (பின்னிணைப்புக்கள்)

- i). நிதி நிலைமை தொடர்பான கூற்று
- ii). நிதிச் செயலாற்றுகை தொடர்பான கூற்று
- iii). தேறிய சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான கூற்று
- iv). நிதிப் பாய்ச்சல் கூற்று
- v). 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று நிதி நிலைமை தொடர்பான குறிப்பு
- vi). 2017 டிசம்பர் 31 ஆம் திகதியன்று பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

12. கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை 2017

# 01. தலைவர் அவர்களின் செய்தி

நில அளவைகள் சபை
இல.150, பேர்னாட் சொய்சா மாவத்தை
நாராஹேன்பிட்ட,கொழும்பு 05
21-03-2017

2002 ,17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் ஊடாக, நில அளவைகள் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள பணிகள் மற்றும் அதிகாரங்கள் என்பவற்றினை நடைமுறைப்படுத்தும்போது பிரதானமாக நில அளவையாளர்களைப் பதிவு செய்தல்,பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களுக்கு வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களை வழங்குதல், தொழில் சார் நில அளவையாளர்களுக்கு தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் அவ்வாறே பதிவு செய்யப்பட்டுள்ள நில அளவையாளர்களின் தொழில் ரீதியான ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன நில அளவைகள் சபையின் பொறுப்புக்கள் ஆகும். அது மட்டுமன்றி, பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களுக்கு எதிராக பொதுமக்கள் முன் வைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதும், பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களின் தகவல்களை பொதுமக்களுக்கு வழங்குவதும்,ஏனைய தொழில்சார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதும் நில அளவைகள் சபையின் பொறுப்புக்களுக்கு உரித்தானவை ஆகும். உயர் தரத்திலான சிறந்த நில அளவை சேவை ஒன்றினை வழங்குதல் என்ற தொனிப்பொருளில் தொழில் நிபுணர்களை வலுவூட்டுவதற்காக 2017 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபைக்கு ஆற்றல் கிடைத்தமை தொடர்பாக மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

நில அளவைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நில அளவை நடவடிக்கைகளை ஒழுங்கு விதிக்கு உட்படுத்தும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு ஒரு தசாப்த காலம் கடந்த பின்னர் அல்லது 2016 ஆம் ஆண்டில் அதற்கான தொழிநுட்ப ஆலோசனைகள் கோவை ஒன்றினைத் தயாரித்து அதனூடாக நில அளவை நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

சுருக்கமாகக் கூறின் ஒவ்வொரு நில அளவையாளர் தொழில்துறையினரும் தமது தொழில் சார் நடவடிக்கைகளை முறையாகவும் மற்றும் உரிய தரத்திற்கு ஏற்பவும் பேணி வருவதற்காக ஆர்வம் ஊட்டல் மேற்படி ஒழுங்குவிதிகளின் மூலம் எதிர்பார்க்கப்பட்டது. நில அளவையாளர்களின் தொழிற்துறை தொடர்பாக சகல தரப்பினர்களினதும் பங்களிப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்பவற்றின் ஊடாக வெளியிடப்பட்ட மேற்படி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் ஒவ்வொரு நில அளவையாளர் தொழில்துறையினருக்கும் அவ்வாறே பொதுவாக முழு நாட்டிற்கும் பயன்களை ஈட்டித்தரும் ஒன்றாகும் என நான் உறுதியாக நம்புகின்றேன். இவ்வகையில் பரிசீலித்துப் பார்ப்பதன் ஊடாக முன்வைக்கப்படும் விடயங்களுக்கு அமைய உரிய ஒழுங்குவிதிகளைத் திருத்தம் செய்து / விருத்தி செய்து வர்த்தமானிப் பத்திரிகைகளின் ஊடாக வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். .

www.landsurveycouncil.org என்ற பெயரில் நில அளவைகள் சபைக்குரிய இணையத்தளம் ஒன்று இந்த வருடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் தொழிற்துறையினருக்கும் மற்றும் பொதுமக்களுக்கும் இடையில் இருந்து செயற்படுவதற்கான மிகவும் வெற்றிகரமான ஊடகம் ஒன்றாக அது அடையாளம் காணப்பட்டது. நில அளவைகள் சபையின் பதிவு மற்றும் அவ்வாறே தகவல்களை வழங்குதல் ஆகிய நடவடிக்கைகளும் மிகவும் வினைத்திறனுடன் மேற்படி இணையத்தளத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களின் தொழில்சார் அபிவிருத்தி மற்றும் அவ்வாறே தொழில்சார் ஒழுக்க நெறிகள் என்பவற்றினை பேணி வருவதற்காக 2016 ஆம் ஆண்டிலும் பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களுக்கு தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பாடநெறிகள் பலவற்றை அனுமதி பெற்றுக்கொண்டு நடாத்துவதற்கு நில அளவைகள் சபை விஷேட நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளன. அங்கு பாடநெறிகளில் கலந்துகொள்வதற்காக பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களினால் வெளிக்காட்டப்பட்ட ஆர்வம் விஷேடமாகத் தென்பட்டது.

மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் நிலவிய அலுவலர் குழாத்தினரின் பற்றாக்குறையினையும் மீறி நில அளவைகள் சபையினை சீராகப் பேணி வருவதற்காக பதிற் கடமை மேற்கொள்ளும் செயலாளர், கணக்காளர் (பகுதி நேர) ஆகியோர் உட்பட மொத்த அலுவலர் குழாத்தினரும் அவ்வாறே உப தலைவர் உட்பட நில அளவைகள் சபையின் உறுப்பினர்களும் வழங்கிய ஒத்துழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு என்பன தொடர்பாக எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பி.எம்.பி.உதயகாந்த
தலைவர்.

# 02. தொலை நோக்கு மற்றும் செயற்பணி

## தொலை நோக்கு

நில அளவைகளுக்காக முறையான ஒரு சட்டகத்தினை தொடர்ச்சியாகப் பேணி வருவதன் ஊடாக தேசிய அபிவிருத்திக்காக எமது பௌதீக மற்றும் இயற்கை வளங்களின் சிறந்த மற்றும் நிலையான பயன்பாட்டினை உறுதிப்படுத்தி அதனூடாக போட்டித் தன்மையான உலகளாவிய சந்தையில் சிறந்த தரத்திலான மற்றும் தொழிற் தேர்ச்சியுடைய நில அளவைச் சேவைகளை வழங்கும் நோக்கில் தொழில் சார் சூழலினை வலுப்படுத்தல் எமது தொலை நோக்காகும்.

## செயற்பணி

நில அளவைகள் தொழில் சார் மற்றும் அதன் நடவடிக்கைகளை முறையாகப் பேணி வருவதாகவும், தொழிற்துறையின் ஊடாக எதிர்பார்க்கும் தொழிநுட்ப நியதிகள் மற்றும் சட்ட பூர்வமான தரங்களுக்கு இணங்கி ஒழுகும் வகையில் பயிற்சி ஒன்றினையும் மற்றும் கல்வி ஒன்றினையும் தொழிற்துறையில் பிரவேசிப்பவர்களுக்கு கிடைப்பதாகவும் அதன் மூலம், தொழிலில் ஈடுபவர்களினால் தொழிற்துறையின் பேணல் உயர் தரத்தில் பேணப்பட்டு வருவதாகவும் உறுதிப்படுத்தல் நில அளவைகள் சபையின் செயற்பணி ஆகும்.

# 03. நில அளவைகள் சபை

2002, 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய 2003 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் கொழும்பு 05, பேர்னாட் சொய்சா மாவத்தை,இலக்கம் 150 எனும் முகவரியில் அமைந்து உள்ள நில அளவையாளர் நாயக அலுவலகக் கட்டிடத்தின் நிலக்கீழ் மாடியில் நில அளவைகள் சபை ஸ்தாபிக்கப்பட்டதுடன் அன்று முதல் தற்போது வரை மேற்படி இடத்தில் நில அளவைகள் சபை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

நில அளவைகள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் நில அளவைகள் சபையின் கூட்டிணைப்பு எவ்வாறு அமைதல் வேண்டும் என்பது தொடர்பாக ஏற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளன. மேற்படி ஏற்பாடுகளுக்கு அமைய நில அளவைகள் சபையானது 7 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதுடன் மேற்படி உறுப்பினர்களை நியமிக்கும் முறை கீழ் வருமாறு விபரிக்கப்படுகின்றது..

(அ) உத்தியோகபூர்வ ரீதியாக நியமனம் பெறும் உறுப்பினர்கள்

i. தலைவர் - நில அளவையாளர் நாயகம் அவர்கள்

ii. உப தலைவர் - நில அளவையாளர் நாயகம் அவர்களினால் பெயர் குறிக்கப்படும் பிரதி நில அளவையாளர் நாயகம் அவர்களுக்கு குறையாத பதவி ஒன்றினை வகிக்கும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர் ஒருவர்

iii. உறுப்பினர்கள் - 1969 ,21 ஆம் இலக்க நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவன சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டு உள்ள நில அளவைகள் மற்றும் வரைபடமாக்கல் நிறுவனத்தின் பணிப்பாளர் அவர்கள்

(ஆ) நியமிக்கப்படும் உறுப்பினர்கள்

i. உறுப்பினர்கள் `- 1982 , 22 ஆம் இலக்க இலங்கை நில அளவையாளர்கள் நிறுவன (கூட்டிணைக்கும்) சட்டத்தின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனத்தினால் பெயரிடப்படும் நில அளவைகள் தொடர்பான விரிவான அனுபவங்கள் மற்றும் தெளிவான ஆற்றல்கள் என்பவற்றினைக் கொண்ட நில அளவையாளர்கள் மூன்று பேர்

ii. 1978 ,16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பெயர் குறிப்பிடப்படும், பல்கலைக்கழகம் ஒன்றில் கல்வியியல், நிருவாக,முகாமைத்துவ அல்லது பொறியியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளிலான ஒரு அறிஞர்.

iii. மேற்படி நியமனம் அமைச்சர் அவர்களினால் மேற்கொள்ளப்படும்.

# 04. நில அளவைகள் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ள கடமைப் பொறுப்புக்கள்

நில அளவைகள் சபையின் பணிகள் நில அளவைகள் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டு உள்ளன.

(அ) நில அளவைக்குரிய தரங்கள் மற்றும் செயலாற்றுகை நடைமுறை என்பவற்றினை பேணி வருதல் மற்றும் நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு இருக்கும் நபர்களுக்கு இடையில் தொழில் ரீதியான ஒழுக்க நெறிமுறைகளைப் பேணி வருதல்.

(ஆ) பதிவு செய்யப்பட்டு உள்ள நில அளவையாளர்களாக பதிவு செய்வதற்காக நில அளவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் மேற்படி நில அளவையாளர்களுக்கு நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்காக உரிய தகைமைகள் மற்றும் அனுபவம் மற்றும் ஆற்றல் மற்றும் தேர்ச்சி என்பன உள்ளது என சபை திருப்தியுரும் சந்தர்ப்பங்களில் அவர்களைப் பதிவு செய்தல்.

(இ) தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் மற்றும் நில அளவைகள் தொழிற்துறையில் ஈடுபடுவதற்காக மேற்படி நில அளவையாளர்களுக்கு அறிவும் மற்றும் திறமையும் உள்ளது என சபை திருப்திப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு மேற்படி அனுமதிப்பத்திரங்களை வழங்குதல்.

(ஈ) நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ள நபர்களுக்கு இடையில் தொழில்சார் கல்வி தொடர்பான உயர் தரத்தினை பேணி வருதலினை ஊக்குவித்தல்.

(உ) நில அளவையாளர் தொழிற்துறையில் ஈடுபட்டு உள்ள மற்றும் வருடாந்த தொழிற்துறை அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொள்வதற்கு குறித்துரைக்கப்பட்ட நபர்களின் அறிவு மற்றும் திறமைகளை விருத்தி செய்யும் பணிக்காக தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேம்படுத்தல்.

(ஊ) நில அளவைகள் தொடர்பான கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை ஏற்றுக்கொள்ளல்,செயன்முறை அனுபவம் தொடர்பான தேவைப்பாடுகளை குறித்துரைத்தல் மற்றும் பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாக பதிவு செய்வதற்கும் மற்றும் வருடாந்த தொழில் சார் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்குமான நோக்கங்களுக்காக தகைமை பெறும் பரீட்சைகள் மற்றும் தொழில் சார் நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்.

(எ) நில அளவை நடவடிக்கைகளில் ஈடுபட்டு உள்ள நபர்களின் கல்வி,பயிற்சி மற்றும் ஏற்றுக்கொள்ளல் ஆகிய விடயங்களில் சம நிலைமை ஒன்றினையும் மற்றும் பரஸ்பர தன்மையினையும் ஸ்தாபிப்பதற்காக வெளிநாடுகளில் உள்ள அதிகாரிகளுடன் பரஸ்பர வேலைத் திட்டங்களுக்கான இணக்கப்பாட்டினை ஏற்படுத்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(ஏ) குறித்துரைக்கப்பட்ட கல்வித் தரங்களைப் பேணி வருவதற்காக இலங்கையின் நில அளவை நடவடிக்கைகள் மற்றும் காணித் தகவல்கள் சார் கல்வி மற்றும் பயிற்சி நடவடிக்கைகள் என்பன தொடர்பாக ஈடுபட்டு உள்ள நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

(ஐ) இலங்கையின் ஏனைய உரிய தொழில்சார் நிறுவனங்களுடன் இணைந்து உயர் தர தொழில் சார் தரங்களைப் பேணி வருதல்.

# 05. நில அளவைகள் சபைக்கு உரித்தான அதிகாரங்கள்

நில அளவைகள் சபையிடம் ஒப்படைக்கப்படும் அதிகாரங்கள் நில அளவைகள் சட்டத்தின் 38 ஆவது பிரிவின் கீழ் கீழே உள்ளவாறு குறிப்பிடப்பட்டு உள்ளது.

( அ ) ஏதேனும் அசையும் அல்லது அசையாத சொத்துக்களை சுவீகரித்துக்கொள்ளல்,ஏற்றல், வாடகைக்கு அல்லது குத்தகைக்கு விடல், ஈடு வைத்தல்,பிணையமாக வைத்தல்,விற்றல் அல்லது வேறு ஏதாவது ஒரு வகையில் கையுதிர்த்தல்.

( ஆ ) பணமாக அல்லது வேறு வகையில் பரிசுகள்,கொடைகள் அல்லது நன்கொடைகளைப் பொறுப்பேற்றல் மற்றும் சுய பணிகளை நிறைவேற்றுவதற்காக அவற்றைப் பயன்படுத்தல்.

( இ ) சபையின் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதற்குத் தேவையான உத்தியோகத்தர்களையும் மற்றும் ஊழியர்களையும் நியமித்தல்.

( ஈ ) அவ்வாறு நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஊழியர்களுக்கும் செலுத்த வேண்டிய உழைப்பிற்குரிய ஊதியத்தைத் தீர்மானித்தல்.

( உ ) சுய பணிகளை விளைதிறன் மிக்க வகையில் நிறைவேற்றுவதற்காக குழுக்களை நியமித்தல்.

( ஊ ) சுய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்காக சமூக பாதுகாப்பு முன்மொழிவுத் திட்டம் ஒன்றினைத் தாபித்தல் மற்றும் நலன்புரி மற்றும் விளையாட்டுத்துறை வசதிகளை வழங்குதல்.

( எ ) சபையின் நடவடிக்கைகளுக்குரிய நிருவாகம் தொடர்பாக விதிகளை ஆக்குதல் மற்றும்

( ஏ ) பொதுவாக சபைக்குரிய பணிகளை உரிய வகையில் நிறைவேற்றுவதனை இலகுபடுத்துவதற்காக தேவைப்படும் ஏனைய சகலவற்றையும் மேற்கொள்ளல்.

## 06. 2017 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையின் செயலாற்றுகை

1. **2017 ,சனவரி மாதம் 1 ஆந்திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆந்திகதி வரையான காலப்பகுதியில் நில அளவைகள் சபையின் உறுப்பினர்கள்**

மீளாய்வு ஆண்டிற்குள், அதாவது, 2017 சனவரி மாதம் 1 ஆந்திகதி தொடக்கம் டிசம்பர் மாதம் 31 ஆந்திகதி வரையிலான காலப்பகுதிக்குள் நில அளவைகள் சபையில் கீழே பெயர் குறிப்பிடப்பட்டு உள்ளவர்கள் உறுப்பினர்களாக நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

| தொடரி லக்கம் | **பெயர்** | **பதவி** | கால எல்லை |
|---|---|---|---|
| **1** | திரு.பீ.எம்.பீ.உதயகாந்த | தலைவர் | 2017-01-01தொடக்கம்2017-131 வரை |
| **2** | திரு.எஸ்.எம்.பி.பீ.சங்கக்கார | , உப தலைவர் | 2017-01-01தொடக்கம்2017-12-31 வரை |
| **3** | திரு.எஸ்.கே.விஜேசிங்ஹ | உறுப்பினர் | 2017-01-01தொடக்கம்2017-02-06 வரை |
| **4** | திரு.டபிள்யு.எம்.எஸ்.வீரசிங்ஹ | உறுப்பினர் | 2017-02-07தொடக்கம்2017-12-31 வரை |
| **5** | திரு.சீ.த.எஸ்.குணதிலக | உறுப்பினர் | 2017-01-01தொடக்கம்2017-12-31 வரை |
| **6** | திரு.எம்.கலுதந்திரி | உறுப்பினர் | 2017-01-01தொடக்கம்2017-12-31 வரை |
| **7** | திரு.டபிள்யு.ஏ.ஏ.விஜேரத்ன | உறுப்பினர் | 2017-01-01தொடக்கம்2017-12-31 வரை |
| **8** | கலாநிதிதிரு.கே.ஆர்.எம்.யூ.பண்டார | உறுப்பினர் | 2017.01.01தொடக்கம்2017.12.31 வரை |

## 2. 2017 டிசம்பர் மாதம் 31 ஆந்திகதியன்று சபை உறுப்பினர்களின் மொத்த சேவைக் காலம்

2017 டிசம்பர் மாதம் 31 ஆந்திகதியன்று சபை உறுப்பினர்கள் பணி புரிந்த மொத்த சேவைக் காலப்பகுதிகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

| தொடரி லக்கம் | பெயர் | பதவி | கால எல்லை |
|---|---|---|---|
| 1 | திரு.பீ.எம்.பீ.உதயகாந்த | தலைவர் | 2014-05-29 தொடக்கம் (வரு. 03 மாதங்கள் 07 நாட்கள் 02) |
| 2 | திரு.எஸ்.எம்.பி.பீ.சங்கக்கார | உப தலைவர் | 2014.05.29 தொடக்கம் (வரு. 03 மாதங்கள் 07 நாட்கள் 02) |
| 3 | திரு.எஸ்.கே.விஜேசிங்ஹ | உறுப்பினர் | 2016.01.25 தொடக்கம் (வரு. 01 மாதங்கள் 00 நாட்கள் 11) |
| 4 | திரு.டபிள்யு.எம்.எஸ்.வீரசிங்ஹ | உறுப்பினர் | 2016.02.07 தொடக்கம் (வரு. 00 மாதங்கள் 10 நாட்கள் 24) |
| 5 | திரு.சீ.த.எஸ்.குணதிலக | உறுப்பினர் | 2015.01.01 தொடக்கம் (வரு. 03 மாதங்கள் 00 நாட்கள் 00) |
| 6 | திரு.எம்.கலுதந்திரி | உறுப்பினர் | 2015.01.01 தொடக்கம் (வரு. 03 மாதங்கள் 00 நாட்கள் 00) |
| 7 | திரு.டபிள்யு.ஏ.ஏ.விஜேரத்ன | உறுப்பினர் | 2015.01.01 தொடக்கம் (வரு. 03மாதங்கள் 00 நாட்கள் 00) |
| 8 | கலாநிதிதிரு. கே.ஆர்.எம்.யூ.பண்டார | உறுப்பினர் | 2015.01.01 தொடக்கம் (வரு. 03 மாதங்கள் 00 நாட்கள் 00 |

## 3. சபையின் கூட்டங்களுக்கு உறுப்பினர்களின் பங்குபற்றல்கள்

ஆண்டிற்குள் ஒவ்வொவ்வொரு உறுப்பினர்களும் சபைக் கூட்டங்களுக்கு பங்குபற்றி உள்ள தடவைகளின் எண்ணிக்கை கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.

| தொடரிலக்கம் | பெயர் | பதவி | கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | திரு.பீ.எம்.பீ.உதயகாந்த | தலைவர் | 22 |
| 2 | திரு.எஸ்.எம்.பி.பீ.சங்கக்கார | உப தலைவர் | 21 |
| 3 | திரு.எஸ்.கே.விஜேசிங்ஹ | உறுப்பினர் | 02 |
| 4 | திரு.டபிள்யு.எம்.எஸ்.வீரசிங்ஹ | உறுப்பினர் | 21 |
| 5 | திரு.சீ.த.எஸ்.குணதிலக | உறுப்பினர் | 09 |
| 6 | திரு.எம்.கலுதந்திரி | உறுப்பினர் | 24 |
| 7 | திரு.டபிள்யு.ஏ.ஏ.விஜேரத்ன | உறுப்பினர் | 18 |
| 8 | கலாநிதிதிரு.கே.ஆர்.எம்.யூ.பண்டார | உறுப்பினர் | 24 |

# 07. நில அளவைகள் சபையின் அலுவலக அலுவலர் குழாம்

நில அளவைகள் சட்டத்தின் 55 ஆவது பிரிவின் ஊடாக சபையின் பணிகளை வினைத்திறனுடன் நிறைவேற்றிக்கொள்வதற்காக அவசியம் என சபை கருதும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்துக் கொள்வதற்கு நில அளவைகள் சபையிடம் அதிகாரம் ஒப்படைக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய, கீழே பெயர் குறிப்பிடப்பட்டு உள்ள அலுவலர் குழாம் மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதிக்குள் நில அளவைகள் சபையின் அலுவலக, அலுவலர் குழாமாக செயற்பட்டு உள்ளது.

| தொடரி லக்கம் | பெயர் | பதவி | கால எல்லை |
|---|---|---|---|
| 1 | திரு.ஜீ.டீ.எஸ்.கே.குணரத்ன | பதிற்கடமைமேற்கொள்ளும் செயலாளர் | 2009.01.01தொடக்கம் 2017-11-17 வரை |
| 2 | திரு.வை.எம்.எஸ்.மல்லிகாரத்ன | கணக்காளர் ( பகுதி நேர) | 2016.06.01தொடக்கம் 2017.08.24 வரை |
| 3 | திருமதி.எஸ்.டீ.பீ.ஜீ.என்.பீ.ஜயரத்ன | கணக்காளர் ( பகுதி நேர) | 2017.08.25தொடக்கம் 2017.12.31 வரை |
| 4 | திருமதி.எஸ்டீ.பீ.ஜீ.என்.பீ.ஜயரத்ன | கணக்காளர் ( பகுதி நேர) | 2017-08-25தொடக்கம் 2017-12-31 வரை |
| 5 | செல்வி.டபிள்யு.ஏ.எஸ்.பிரியதர்ஷனி | கணினிநிகழ்ச்சிட்டஉதவியாளர் / எழுதுவினைஞர் | 2004-05-24தொடக்கம் 2017-12-31 வரை |
| 6 | திருமதி.ஆர்.எம்.என்.ரத்னாயக்க | கணினிநிகழ்ச்சித்திட்ட உதவியாளர் / எழுதுவினைஞர் | 2004.05.24தொடக்கம் 2017-12-31 வரை |
| 7 | திரு.ரீ.ஜீ.பிரனாந்து | அலுவலகப் பணியாளர் | 2004-7-15 தொடக்கம் 2017-12-31 வரை |

# 08. நில அளவைகள் சபையின் செயற்பாடுகள்

## 1. பதிவு செய்தல்கள்


மீளாய்வு ஆண்டிற்காக, அதாவது, 2017 சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களாக பதிவு செய்வதற்காக நில அளவையாளர்களிடம் இருந்து பெறப்பட்ட பரீட்சிப்புக்களின் பின்னர், அந்த ஒவ்வொவ்வொரு நில அளவையாளர்களுக்கும் நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக உரிய தகைமைகள் ,அனுபவம்,ஆற்றல் மற்றும் தேர்ச்சி என்பன உள்ளனவா என்பது தொடர்பாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டது.

சபை திருப்தியடைந்ததன் பின்னர் மீளாய்வு ஆண்டில் அவற்றுள் அதிகாரம் பெற்ற 10 நில அளவையாளர்கள் நில அளவைகள் சபையினால் புதிதாக பதிவு செய்யப்பட்டனர். அதற்கு அமைய 2017 டிசம்பர் 31 ஆந்திகதியன்று சபையில் பதிவினைப் பெற்றுக்கொண்ட மொத்த நில அளவையாளர்களின் எண்ணிக்கை 2101 ஆகும்.

## 2. தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரங்கள்

மீளாய்வு ஆண்டிற்காக, நில அளவைகள் சார் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் 2016 செப்தெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர், அதற்காக மேற்படி நில அளவையாளர்களுக்கு அறிவு மற்றும் திறமை என்பன இருக்கின்றதா என சபையினால் பரீட்சித்துப் பார்க்கப்பட்டதன் பின்னர் 2017 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையினால் புதிதாக 1004 வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. இது, 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திரங்களின் எண்ணிக்கையாகிய 1031 உடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2.6% அளவில் குறைந்துள்ளது அவதானிக்கப்படுகின்றது.

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில், நில அளவைகள் சபையினால் நில அளவையாளர்களுக்கு வழங்கப்பட்ட வருடாந்த அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான புள்ளிவிபரவியல் ரீதியான தகவல்கள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள 1 ஆவது படத்தின் மூலம் வரைபு ரீதியாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.




### 1 ஆவது படம்

2017 சனவரி 1 ஆந்திகதி தொடக்கம் டிசம்பர் 31 ஆந்திகதி வரையான மீளாய்வு ஆண்டிற்காக 2017 பெப்ரவரி மாதம் 28 ஆந்திகதியன்று வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் அடிப்படைத் தகவல்கள், அதாவது முதலெழுத்துக்களுடன் பெயர்,பதிவு இலக்கம் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் ஆகிய தகவல்களை 2017 மார்ச் மாதம் 23 ஆந்திகதிய மற்றும் 2011/24 ஆம் இலக்க வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரித்து வெளியிடுவதற்கு சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளது.

அதற்கு மேலதிகமாக, வருடாந்த அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொண்ட பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களின் உரிய சகல தகவல்களையும் அதாவது பதிவு இலக்கம், முதலெழுத்துக்களுடன் பெயர்,முழுப் பெயர்,தேசிய அடையாள அட்டை இலக்கம்,வசிக்கும் மாவட்டம், முகவரி, தொலைபேசி இலக்கம்,தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான வருடாந்த அனுமதிப்பத்திர இலக்கம் மற்றும் அனுமதிப்பத்திரம் செல்லுபடியாகும் காலப்பகுதி ஆகிய தகவல்கள் நில அளவைகள் சபையின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் (www.landsurveyco uncil.org) உள்ளடக்கப்பட்டு உள்ளது. மேற்படி விபரங்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகின்றது.

## 1. பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குதல்.

நில அளவைகள் சபையினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்பாக பொது மக்கள் தற்போது போதியளவிலான அறிவினைப் பெற்றுக்கொண்டு உள்ளனர். ஆதலால், நூற்றுக்கணக்கான வருடங்கள் பழைமையான வரைபடங்கள் தொடர்பாகவாயினும், அதற்கு உரிய நில அளவை நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ள அதிகாரம் பெற்ற வாழ்க்கைத் தரவுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காக நில அளவைகள் சபைக்கு வருகை தரும் ஆட்கள் கடந்த காலப்பகுதியில் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்து உள்ளனர். அதற்கு மேலதிகமாக, மின்னஞ்சல் ஊடாகவும் மேற்படி தகவல்களுக்காக நிதமும் கோரிக்கைகள் கிடைக்கப்பெறுகின்றன. மேற்படி தகவல்களை சரியாகவும் மற்றும் விரைவாகவும் வழங்குவதற்காக நில அளவைகள் சபையின் அலுவலர் குழாம் பாரிய அர்ப்பணிப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், அங்கு மேற்படி தகவல்களை உடனடியாக வழங்குவதற்கு இயலுமான எப்பொழுதும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீளாய்வு செய்யப்பட்ட காலப்பகுதியில் பொதுமக்களின் கோரிக்கைகளுக்கு ஏற்ப 180 சந்தர்ப்பங்களில் தகவல்கள் வழங்கப்பட்டு உள்ளன.

வருடாந்த அனுமதிப்பத்திரதாரர்களாகிய பதிவு செய்யப்பட்ட சகல நில அளவையாளர்களினதும் பிரத்தியேக முகவரி,பதிவு இலக்கம்,தொலைபேசி இலக்கம், வருடாந்த அனுமதிப்பத்திர இலக்கம் ஆகிய தகவல்களை உள்ளடக்கிய கணினி மயப்படுத்தப்பட்ட தரவுக் கட்டமைப்பு ஒன்று நில அளவைகள் சபையினால் தயாரிக்கப்பட்டு பேணி வருவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. அதற்கு மேலதிகமாக, அவர்களின் புகைப்படம் ஒன்றினையும் மேற்படி தரவுக் கட்டமைப்பில் உள்ளடக்குவதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மேற்படி தரவுக் கட்டமைப்பிற்குள் அவர்களின் தொலைபேசி இலக்கம் உட்பட தொடர்புகளுக்கான தகவல்களை உள்ளடக்கி உள்ளதனால் தேவையான வரைபடங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்வதற்கான வசதிகள் இதனூடாக பொதுமக்களுக்குக் கிடைத்து உள்ளது. அவ்வாறாயினும், இது வரை நில அளவைகள் சபையினால் வழங்கப்படும் மேற்படி சேவையின் ஊடாக பொதுமக்களுக்குத் தேவையான அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களினால் தயாரிக்கப்பட்ட பழைய வரைபடங்களின் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும் வழிமுறை ஒன்றினைத் தயாரிப்பதற்கு இயலாமல் போயுள்ளது. நில அளவைகள் தொடர்பாக பொதுமக்கள் முகங்கொடுக்கும் பிரதான பிரச்சினை ஒன்றாக இது அடையாளம் காணப்பட்டு உள்ளதுடன் அது தொடர்பாக நடைமுறைப்படுத்தக் கூடிய வழிமுறை ஒன்றினை திட்டமிடுவதற்கு சபை கவனம் செலுத்தி உள்ளது.

## 2. நில அளவைகள் சபைக்குக் கிடைக்கப் பெற்ற பொதுமக்களின் முறைப்பாடுகள்

அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களினால் மேற்கொள்ளப்படும் தொழில் சார் முறைகேடுகள் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை விசாரணை செய்தல் நில அளவைகள் சபைக்கு உரித்தான இன்னுமோர் பிரதான பணியாகும். வெறுமனே, மேற்படி முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படுவது நில அளவைகள் சட்டத்தின் 46 ஆவது பிரிவின் கீழ் குறித்துரைக்கப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் கீழ் ஆகும். முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்காக ஒவ்வொரு மாதத்திற்கும் ஒரு முறை நில அளவைகள் சபை கூட்டப்படுவதுடன் ஒரு கூட்டத்தொடரில் 6 அல்லது 7 முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இதனூடாக, பொதுமக்களுக்கு காணிப் பிரச்சினைகள் தொடர்பாக நிலவும் பிரச்சினைகளை பெருமளவில் தீர்த்துக் கொள்வதற்கு இயலுமாவதுடன் நில அளவையாளர்களுக்கு இடையில் ஒழுக்க நெறிகளைப் பேணிச் செல்வதற்கான வழிமுறை ஒன்றாகவும் அமைகின்றது.

எவ்வாறாயினும், சில முறைப்பாடுகளின் தன்மைக்கு ஏற்ப, அதாவது, நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு அமைய, குற்றச்சாட்டுக்களை நிரூபிப்பதற்கான சாட்சிகள் இல்லாத, நீதிமன்றத் தீர்ப்பிற்கு ஏற்ப நீதிமன்ற ஆணையாளர்களாக மேற்கொள்ளப்பட்ட நில அளவைகள் மற்றும் நில அளவைகள் சபையின் அதிகாரங்களின் கீழ் செயற்பட முடியாத, மேற்படி வகையான முறைப்பாடுகள் தொடர்பாக நில அளவைகள் சபை தீர்மானங்களை வழங்காது என்பதுடன், மேற்படி சந்தர்ப்பங்களில் உரிய முறைப்பாட்டாளர்களுக்கு மேற்படி பிரச்சினைகளை நீதி மன்ற நடவடிக்கைகளின் மூலம் தீர்த்துக்கொள்வதற்கு அவசியமான ஆலோசனைகள் வழங்கப்படும்.

2016 ஆம் ஆண்டில் கிடைக்கப் பெற்று விசாரணைகள் பூர்த்தி அடையாத முறைப்பாடுகள் மற்றும் 2017 ஆம் ஆண்டில் விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான புள்ளிவிபரவியல் தரவுகள் கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.


2017 சனவரி மாதம் 1 ஆந்திகதியன்று விசாரணைகள் பூர்த்தியடையாது எஞ்சியிருந்த எண்ணிக்கை = 45

2017 ஆம் ஆண்டிற்குள் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை = 80

2017 ஆம் ஆண்டில் விசாரணைகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை = 96

2017 டிசம்பர் 31 ஆந்திகதியன்று விசாரணைகள் பூர்த்தியடையாது எஞ்சியிருந்த எண்ணிக்கை = 29

2016 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 96 ஆவதுடன் அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2017 ஆம் ஆண்டில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறும் சதவீதம் 16% இனால் குறைந்து உள்ளதாக அவதானிக்கப்பட்டது. அவ்வாறே, முறைப்பாடுகளின் விசாரணைகளைப் பூர்த்தி செய்தல் 2016 ஆம் ஆண்டில் 91 ஆகக் காணப்பட்டதுடன் அதனோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது 2017 ஆம் ஆண்டில் முறைப்பாடுகளை விசாரணை செய்யும் சதவீதம் 5.5% இனால் அதிகரித்து உள்ளமை தென்படுகின்றது.
மேற்படி தரவுகள் கீழே காட்டப்பட்டு உள்ள 2 ஆவது படத்தின் மூலம் வரைபு ரீதியான காட்டப்பட்டு உள்ளது.




**2 ஆவது படம்**

## 3. பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களின் முறைகேடான செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

நில அளவை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது முறைகேடான நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளதாக சபை தீர்மானித்து உள்ள போது அவ்வாறான நபர்களுக்கு எதிராக 2002 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க நில அளவைகள் சட்டத்தின் 47 ஆவது பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் தண்டனைகள் வழங்கப்படலாம்.

2017 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையினால் மேற்படி 4 ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டு உள்ள வகையில், கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளுக்கான விசாரணைகள் நடாத்தப்பட்டதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய பிரதிவாதி நில அளவையாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டு உள்ள வகையில் தண்டனை வழங்கப்பட்டது.

| | |
|---|---|
| பதிவு இரத்து செய்யப்பட்ட எண்ணிக்கை | = 00 |
| பதிவு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட எண்ணிக்கை | = 01 |
| வருடாந்த அனுமதிப்பத்திரம் இரத்து செய்யப்பட்ட எண்ணிக்கை | = 00 |
| வருடாந்த அனுமதிப்பத்திரம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட எண்ணிக்கை | = 01 |

2017 ஆம் ஆண்டில் விசாரணை செய்து பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளுள், அவ்வாறு தண்டனை வழங்கப்பட்ட நில அளவையாளர்கள் தொடர்பான விபரங்கள் கீழே அட்டவணை இலக்கம் 01 இல் காட்டப்பட்டு உள்ளது.

| முறைப்பாட்டு இலக்கம் | பதிவு இலக்கம் | நில அளவையாளரின் பெயர் | மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| LSC/5/879 | 19921508 | ஏ.எம்.நஜிவுடீன் | 2017-08-01 தொடக்கம் 2018-07-31 வரை அனுமதிப்பத்திரம் இடைநிறுத்தப்பட்டது. |
| LSC/5/890 | 19890159 | எச்.விஜயதுங்க | 2017-11-01 தொடக்கம் 2018-12- வரை 31 பதிவு இடைநிறுத்தப்பட்டது. |

# 09. கற்கை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

## 1. தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் ( CDP) பாடநெறிகள்

காணிகளை அளத்தல் தொடர்பான பாடங்களை எடுத்துக் கொண்டால் தொடர்ச்சியான தொழிற்துறை அபிவிருத்தி அத்தியவசியமான ஒரு விடயமாகும். நில அளவைகள் சார் தொழிற்துறையில் ஈடுபட்டு உள்ள மற்றும் நில அளவைகள் சபையின் வருடாந்த அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் தொழிற்துறையினரின் அறிவு மற்றும் திறமை என்பவற்றினை விருத்தி செய்வதற்காக தொழில் சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் நில அளவைகள் சபைக்கு உரித்தான பணி ஒன்றாக நில அளவைகள் சட்டத்தின் 37 ஆவது பிரிவின் கீழ் ஏற்பாடுகள் செய்யப்பட்டு உள்ளன. ஆதலால் சகல அதிகாரம் பெற்ற நில அளவையாளர்களும் நில அளவைத் தொழிற்துறை தொடர்பான நவீன தொழிநுட்பம் மற்றும் வழிமுறைகள் என்பன தொடர்பான பயிற்சிப் பாடநெறிகள் / செயலமர்வுகள் என்பவற்றில் பங்குபற்றச் செய்வதற்காக ஆர்வமூட்டல் நில அளவைகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

இங்கு, பிரத்தியேகமாக நில அளவைத் தொழிற்துறையில் ஈடுபடுவதற்கு எதிர்பார்க்கும் பயிலுநர் நில அளவை தொழிற்துறையினரை நெறிப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் அவ்வாறே அனுபவம் மிக்க நில அளவையாளர்களுக்காக விருத்தியடைந்த தொழிநுட்ப முறைகளுக்கு உரிய நிகழ்ச்சித்திட்டங்களும் வெவ்வேறாக நடாத்தப்படும். மேலும், நில அளவைகள் சபைக்கு மேலதிகமாக, அதன் கண்காணிப்பின் கீழ் இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம் மற்றும் அதிகாரம் பெற்ற மாவட்ட நில அளவையாளர்களின் சங்கம் போன்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனங்களின் ஊடாகவும் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

## 2. முதன் முறையாக தொழிற்துறையில் ஈடுபடுவதற்கான அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் நில அளவையாளர்களுக்கான செயலமர்வுகள்

நில அளவைகள் சபையினால் தொழிற்துறையில் ஈடுபடுவதற்காக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்களுக்கு வழங்கப்படும் வருடாந்த நில அளவை அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி தொழில் சார் நில அளவையாளர்களாக தமது வாழ்வாதாரத் தொழிலில் முதன் முறையாக பிரவேசிக்கும் சந்தர்ப்பத்தில் அவர்களை நெறிப்படுத்துவதற்கான பாடநெறிகளை நடாத்துதல் நில அளவைகள் சபையினால் வருடாந்தம் மேற்கொள்ளப்படும். மேற்படி பாடநெறிகளின் போது வளவாளர் பங்களிப்பிற்காக தொழிநுட்ப அறிவினையும் மற்றும் அனுபவத்தினையும் கொண்ட பதிவு செய்யப்பட்ட கீர்த்தி மிகு நில அளவையாளர்களை ஈடுபடுத்தி புதிய நில அளவையாளர்களுக்குத் தேவையான அறிவு மற்றும் விளக்கம் என்பவற்றினை வழங்குதல் மேற்கொள்ளப்படும்.

## 3. வெளிவாரியான நிறுவனங்களினால் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பாடநெறிகள்

இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம் மற்றும் அதிகாரம் பெற்ற மாவட்ட நில அளவையாளர்கள் சங்கம் என்பவற்றின் ஊடாக பதிவு செய்யப்பட்ட நில அளவையாளர்கள் மற்றும் பதிவு செய்யப்பட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் ஆகியோர்களுக்காக தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பாடநெறிகளை நடாத்தும்போது விஷேட ஆர்வத்துடன் செயற்படும். மேற்படி பாடநெறிகள் நில அளவைகள் சபையின் கண்காணிப்பின் கீழ் நடாத்தப்படுவதுடன் அது தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரியான நிறுவனங்கள் வெளிக்காட்டும் ஆர்வம் தொடர்பாக நில அளவைகள் சபை மிகவும் மகிழ்ச்சி அடைகின்றது.

2017 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டு உள்ள தொடர்ச்சியான தொழில் சார் அபிவிருத்திப் பாடநெறிகள் தொடர்பான சாராம்சம் ஒன்று கீழே குறிப்பிடப்பட்டு உள்ளது.


| தொடரி லக்கம் | நிறுவனம் | தொழில் சார் அபிவிருத்திப் பாடநெறி | நடாத்தப்பட்ட திகதி |
|---|---|---|---|
| 1. | கண்டி மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம் | Bimsaviya Surveys | 23-03-17 |
| 2. | நில அளவைகள் சபை | Orientation Course No. 12 | 24-03-17 |
| 3. | இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம் | Information and Communication Technology (ICT) LIDAR- An Introduction and Overview | 28-04-17 |
| 4. | இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம் | Distance Learning Programme Surveying - Related Modules | 25-05-17 |
| 5. | நில அளவைகள் சபை | Technical Session No. I | 30-06-17 |
| 6. | கம்பஹா மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம் | Construction Surveys | 06-07-17 |
| 7. | இலங்கை நில அளவையாளர்கள் நிறுவனம் | Land Law | 15-07-17 |
| 8. | கண்டி மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம் | Sri Lanka Continuously Operating Reference Station | 21-08-17 |
| 9. | நில அளவைகள் சபை | Technical Session No. II | 15-10-17 |
| 10. | மாத்தறை மாவட்ட அதிகாரம் பெற்ற நில அளவையாளர்கள் சங்கம் | Application and usage of ZW Cad and application of new Technology | 01-11-17 |

# 10. நிதி முகாமைத்துவம்

## 1). மொத்த வருமானம் மற்றும் மொத்தச் செலவு

2017 ஆம் ஆண்டில் நில அளவைகள் சபையினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் 3910376.30 ரூபா ஆகக் காணப்பட்டதுடன் மேற்படி ஆண்டில் ஏற்கப்பட்ட மொத்தச் செலவு 4923415.28 ஆகக் காணப்பட்டது. அதற்கு அமைய 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, 2017 ஆம் ஆண்டில் சபையினால் சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் முறையே ரூபா 92460.46 இனாலும் மற்றும் ரூபா 271069.44 இனாலும் அதிகரித்து உள்ளது.

கீழே குறிப்பிடப்பட்டு உள்ள 3 ஆவது படத்தில் 2016 மற்றும் 2017 ஆகிய வருடங்களில் மொத்த வருமானம் மற்றும் செலவு என்பன வரைபு ரீதியாக எடுத்துக் காட்டப்பட்டு உள்ளது.




**3 ஆவது படம்**

## 2). சபையின் நிதியம் மற்றும் நிதி முகாமைத்துவம்

நில அளவைகள் சட்டத்தின் 56 (2) ஆவது பிரிவின் கீழ் நில அளவைகள் சபையின் நிதியம் சேகரிக்கப்பட வேண்டிய முறை தொடர்பாக விபரிக்கப்பட்டு உள்ளது. அதற்கு அமைய, மொத்த நிதியத்திலிருந்து கிடைக்கக் கூடிய தொகையும், நில அளவைகள் சட்டத்தின் கீழ் சபைக்கு வழங்கப்பட்டு உள்ள அதிகாரங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்துவதன் மூலமும் மற்றும் நிறைவேற்றுவதன் மூலமும் சபைக்குக் கிடைக்கும் பணமும் சபையில் வரவு வைக்கப்படுதல் வேண்டும். அதற்கு மேலதிகமாக பரிசுகள்,கொடைகள் மற்றும் நன்கொடைகள் என்ற வகையில் சபைக்குக் கிடைக்கும் பணமும் சபையின் நிதியத்திற்கு சேரும். சபையின் பணிகளையும் மற்றும் அதிகாரங்களையும் நடைமுறைப்படுத்தும் போது செலவிடப்படும் தொகையினை நில அளவைகள் சட்டத்தின் 56 (3) ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்படி நிதியத்தில் இருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

நில அளவைகள் சபைக்கு பொதுத் திறைசேரியில் இருந்து முதல் இரண்டு வருடங்களில் மாத்திரம் நிதி ஒதுக்கீடுகள் கிடைக்கப்பெற்று உள்ளன. எனினும், 2017 ஆம் ஆண்டில் எந்தவொரு ஒதுக்கீட்டுத் தொகையும் பொதுத் திறைசேரியில் இருந்து கிடைக்கப்பெறவில்லை. ஆதலால் நில அளவைகள் சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகளை நடைமுறைப்படுத்தும் போது மற்றும் நிறைவேற்றும் போது அதற்கு உரிய சகல நிறுவன ரீதியான மற்றும் நிருவாக செலவுகள் ஏற்கப்பட்டது அதன் ஊடாக சேகரிக்கப்பட்ட நிதியத்தின் மூலமாகும். நில அளவைகள் சபையின் சகல நிதிகளும் நில அளவைகள் சபையினால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றது.

நில அளவைகள் சபை நிதியத்தின் பிரதான தோற்றுவாயாக உள்ளது நில அளவையாளர் தொழிற்துறையினருக்கு வருடாந்தம் அனுமதிப்பத்திரங்களை வழங்குவதனால் கிடைக்கும் வருமானம் ஆகும். அதற்கு மேலதிகமாக, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றினை நடாத்துவதன் மூலமும்,பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதன் மூலமும், பொதுமக்களின் முறைப்பாடுகளை உள்ளடக்குவதன் மூலமும் மற்றும் பரீட்சிப்புக் கட்டணங்களாக குற்றம் சாட்டப்பட்ட நில அளவையாளர்களிடம் இருந்து அறவிடப்படும் பரீட்சிப்புக் கட்டணம் ஆகியவற்றின் மூலமும் நில அளவைகள் சபைக்கு நிதியம் கிடைக்கும்.

2017 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியன்று நில அளவைகள் சபையின் நிலையான வைப்புக்கள் கணக்கில் காணப்பட்ட நிதியத்தின் மீதி, 6259161.91 ரூபாவாகக் காணப்பட்டது.

## 3). நிதி நடவடிக்கைகளின் கணக்காய்வு

நில அளவைகள் சபையினால் மேற்கொள்ளப்படும் நிதி நடவடிக்கைகள் கணக்காய்வாளர் நாயகம் அவர்களினால் வருடாந்தக் கணக்காய்விற்கு உட்படுத்தப்படும். கணக்காய்வு முகாமைத்துவக் குழு ஒன்றும் நில அளவைகள் சபையினால் நியமிக்கப்பட்டு உள்ளதுடன் அது கீழே குறிப்பிடப்பட்டு உள்ள உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்.

i). பொதுத் திறைசேரியின் பிரதிநிதி ஒருவர் (தலைவர்)

ii). நில அளவைகள் சபையின் செயலாளர் (செயலாளர்)

iii). கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்தின் பிரதிநிதி ஒருவர் (உறுப்பினர்)

iv). நில அளவைகள் சபையின் உறுப்பினர்கள் இருவர் (உறுப்பினர்கள்)

v). நில அளவைகள் சபையின் கணக்காளர் (உறுப்பினர்)

மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மேற்படி குழு ஒன்றுகூடுவதுடன் அதன்போது, சபையின் நடவடிக்கைகள் தொடர்பாக பகுப்பாய்வு ரீதியாக கேட்டறியப்பட்டதன் பின்னர் மேற்படி குழுவின் அறிக்கைகள் நில அளவைகள் சபையின் கவனத்திற்கும் மற்றும் தேவையான நடவடிக்கைகளுக்காகவும் அனுப்பப்படும். 2017 ஆம் ஆண்டிற்காக வெளியிடப்பட்ட கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை இங்கு உள்ளடக்கப்பட்டு உள்ளது.

## 4). **கணக்குகளின் சாராம்சங்கள்**

2017 ஆம் ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட கணக்குகளின் சாராம்சங்கள் இங்கு கீழே குறிப்பிடப்பட்டு உள்ளன.

எச்.எம்.பீ.பி. ஹேரத்
தலைவர்
சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்

எஸ்.சிவானந்தராஜா
செயலாளர்
நில அளவைகள் சபை

## 11. 2017 ஆம் ஆண்டிற்கான இறுதி கணக்குக் கூற்றுக்கள் (பின்னிணைப்புக்கள்)

**காணி அமைச்சு**

**நில அளவைகள் சபை**

**2017 டிசம்பர் 31ஆம் திகதியன்று**

**நிதி நிலைமை தொடர்பான கூற்று**

| விபரம் | குறிப்புக்கள் | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | | | |
| **அசையாத சொத்துக்கள்** | | | | | |
| இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 1 | 954,351.59 | | 1,075,549.95 | |
| நிலையான வைப்புக்கள் | 2 | 5,000,000.00 | | 5,000,000.00 | |
| | | | 5,954,351.59 | | 6,075,549.95 |
| | | | | | |
| **அசையும் சொத்துக்கள்** | | | | | |
| அனர்த்தக் கடன் | 3 | 320,665.00 | | 218,415.00 | |
| கிடைக்கப்பெற வேண்டியவை | 4 | 956,447.92 | | 508,000.00 | |
| நிலையான வைப்புக்கள் | | - | | 1,000,000.00 | |
| நிதி மற்றும் நிதிக்கு சமனான விடயங்கள் | 5 | 2,212,222.08 | | 2,174,549.69 | |
| | | | 3,489,335.00 | | 3,900,964.69 |
| | | | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | | 9,443,686.59 | | 9,976,514.64 |
| | | | | | |
| **உரித்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **மூலதன விநியோகம்** | | | | | |
| பொதுத் திறைசேறி | | 1,043,030.00 | | 1,043,030.00 | |
| திரண்ட நிதியம் | | 5,678,559.95 | | 6,504,170.24 | |
| மிகை / குறைவு | | (1,013,038.98) | | (834,430.00) | |
| | | | 5,708,550.97 | | 6,712,770.24 |
| | | | | | |
| **அசையும் பொறுப்புக்கள்** | | | | | |
| செலுத்தப்பட வேண்டிய செலவுகள் | 6 | 370,598.12 | | 291,891.57 | |
| சேரல் செலவுகள் | | | | 234,595.62 | |
| உறுதியற்ற கணக்கு | 7 | | | 8,819.71 | |
| அடையாளம் காணப்படாத முன்னைய வரவுகள் | | 3,364,537.50 | | 2,728,437.50 | |
| | | | 3,735,135.62 | | 3,263,744.40 |
| **மொத்த உரித்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | | 9,443,686.59 | | 9,976,514.64 |

நில அளவைகள் சபை சார்பில் இந்த நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் முன்வைத்தல் என்பவற்றிற்காக சபையின் உறுப்பினர்கள் பொறுப்புக் கூறுகின்றனர். இந்த நிதிக் கூற்றுக்களின் குறிப்புக்களின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளவாறு மிகவும் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் பயன்படுத்தப்பட்டு உள்ளன.

| எச்.எம்.பீ.பி. ஹேரத் | எஸ்.சிவானந்தராஜா | கே.எல்.ஏ.என். சந்தமாலி |
|---|---|---|
| செயலாளர் | தலைவர் | கணக்காளர் |
| சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு | நில அளவைகள் சபை | நில அளவைகள் சபை |

Chairman
Land Survey Council

Accountant
Land Survey Council

## காணி அமைச்சு
## நில அளவைகள் சபை
## 2017 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான
## நிதிச் செயலாற்றுகை

| விபரம் | குறிப்பு | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|---|
| | | ரு. | ரு. | ரு. | ரு. |
| **வருமானங்கள்** | | | | | |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | | 2,510,000.00 | | 2,577,500.00 | |
| பதிவுக் கட்டணம் | | 31,500.00 | | 84,000.00 | |
| வட்டி வருமானங்கள் | 8 | 676,304.76 | | 539,515.81 | |
| ஏனைய வருமானங்கள் | 9 | 165,311.54 | | 231,613.87 | |
| செயலமர்வுகளின் தேறிய வருமானம் | 10 | 527,260.00 | | 385,286.16 | |
| மொத்த வருமானம் | | | 3,910,376.30 | | 3,817,915.84 |
| **செலவுகள்** | | | | | |
| <u>தாபன மற்றும் நிருவாகச் செலவுகள்</u> | | | | | |
| சம்பளங்கள் மற்றும் ஊதியங்கள் | 11 | 1,006,388.93 | | 820,095.41 | |
| மேலதிக நேர மற்றும் விடுமுறை தினக் கொடுப்பனவுகள் | | 24,292.28 | | | |
| ஏனைய கொடுப்பனவுகள் | 12 | 2,663,377.67 | | 2,656,616.29 | |
| உள்நாட்டுப் பிரயாணச் செலவுகள் | | 13,356.00 | | 17,378.00 | |
| காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் | | 148,399.79 | | 46,317.29 | |
| உணவுகள் மற்றும் பான வகைகளுக்கான செலவுகள் | | 181,448.25 | | 133,726.00 | |
| இயந்திரங்கள் உபகரணங்கள் என்பவற்றின் பராமரிப்புச் செலவு | | 19,722.50 | | 10,545.00 | |
| இயந்திரங்கள் உபகரணங்கள் என்பவற்றைக் கட்டியெழுப்பும் செலவுகள் | | 95,360.88 | | 15,000.00 | |
| தபால் மற்றும் தொடர்பாடல்கள் | | 164,105.97 | | 238,172.16 | |
| மின் மற்றும் நீர் | | 78,734.40 | | 78,734.40 | |
| கணக்காய்வுக் கட்டணங்கள் | | 173,800.00 | | | |
| ஏனையவை | 13 | 156,633.25 | | 486,428.47 | |
| | | | 4,725,619.92 | | 4,503,013.02 |
| <u>நிதி மற்றும் ஏனைய செலவுகள்</u> | | | | | |
| தேய்மானங்கள் | | 197,795.36 | | 149,332.82 | |
| மொத்தச் செலவுகள் | | | 4,923,415.28 | | 4,652,345.84 |
| காலப்பகுதிக்கு உரிய மிகை/ குறைவு | | | (1,013,038.98) | | (834,430.00) |

## 2017 டிசம்பர் 31 ஆந்திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான

## உரிமை முதல் மாற்றமடைதல் தொடர்பான கூற்று

| விபரம் | மூலதனக் கொடைகள் | திரண்ட நிதியம் / குறைபாடு | மொத்தம் |
|---|---|---|---|
| 2016 டிசம்பர் 31 ஆந்திகதியன்று மீதி | 1,043,030 | 5,669,740.24 | 6,712,770.24 |
| முன்னைய வருடத்தின் சீராக்கல்கள் | | 8,819.71 | 8,819.71 |
| காலப்பகுதிக்கான மிகை / நிலுவை | | (1,013,038.98) | (1,013,038.98) |
| 2017 டிசம்பர் 31 ஆந்திகதியன்று மீதி | 1,043,030 | 4,665,520.97 | 5,708,550.97 |

**காணி அமைச்சு**

**நில அளவைகள் சபை**

**2017 டிசம்பர் 31 ஆந்திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான**

**நிதிப் பாய்ச்சல் கூற்று**

| விபரம் | குறிப்பு | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஊடான நிதிப் பாய்ச்சல்கள்** | | | | | |
| மிகை / (குறைவு) | | (1,013,038.98) | | (834,430.00) | |
| **பணம் அல்லாத அசைவுகள்** | | | | | |
| தேய்மானம் | | 197,795.36 | | 149,332.82 | |
| நிலையான வைப்புக்களின் வட்டி | | (676,304.76) | | (539,515.81) | |
| **மூலதன மாற்றங்களுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம்** | | | **(478,509.40)** | | **(390,182.99)** |
| **மூலதன மாற்றங்கள்** | | | | | |
| இடர் கடன் (அதிகரிப்பு)/குறைவு | | (102,250.00) | | 91,140.00 | |
| கிடைக்கப் பெற வேண்டியவை (அதிகம்)/குறைவு | | (46,500.00) | | (18,793.00) | |
| நிலையான வைப்புக்கள் (அதிகரிப்பு)/குறைவு | | 1,000,000.00 | | (1,000,000.00) | |
| செலுத்தப்பட வேண்டிய செலவின் (அதிகரிப்பு)/குறைவு | | (234,595.62) | | 105,658.99 | |
| சேரல் செலவுகளின் (அதிகரிப்பு)/குறைவு | | 78,706.55 | | 74,731.73 | |
| அடையாளம் காணப்பட்ட பெறுகைகளின் (அதிகரிப்பு)/குறைவு | | 636,100.00 | | 132,037.50 | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்** | | | 1,424,460.93 | | (797,504.78) |
| **முதலீட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய நிதிப் பாய்ச்சல்கள்** | | | | | |
| நிலையான வைப்புக்கள் (அதிகரிப்பு)/குறைவு | | 181,356.84 | | 2,383,703.47) | |
| நிலையான வைப்புக்களின் வட்டி | | | | 104,515.81 | |
| நிலையான வைப்புக்களின் கொள்வனவு | | (76,597.00) | | (558,395.00) | |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளினால் தோன்றிய தேறிய நிதிப் பாய்ச்சல்கள்** | | | 104,759.84 | | 1,929,824.28 |
| **தி நடவடிக்கைகளின் ஊடான நிதிப் பாய்ச்சல்கள்** | | | | | |
| முன்னைய வருடத்தின் சீராக்கல்கள் திரண்ட நிதியத்திற்காக | | | | | 0 00) |
| பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவற்றின் தேறிய (அதிகரிப்பு)/குறைவு | | 37,672.39 | | | (92,293.49) |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவற்றின் | | 2,174,549.69 | | | 2,266,843.18 |
| காலப்பகுதியின் இறுதியில் பணம் மற்றும் பணத்திற்கு ஈடானவை | 1 | 2,212,222.08 | | | 2,174,549.69 |

1 – இயந்திரங்கள் மற்றும் கருவிகள்

| பொருள் | 2017-01-01 ஆந்திகதிய ன்று மீதி ரூ. | ஆண்டிற் குள் கொள்வ னவு ரூ. | மொத்தம் ரூ. | தேய்மா னம் % | வருடாந்த தேய்மான ம் ரூ. | 2017.12.31 ஆந்திகதிய ன்று தேறிய பெறுமதி |
|---|---|---|---|---|---|---|
| **தொட்டு உணரக்கூடிய சொத்துக்கள்:** | | | | | | |
| கருவிகள் | 187,178.90 | | 187,178.90 | 20 | 37,435.78 | *149,743.12* |
| தளபாடங்கள் | 149,653.01 | | 149,653.01 | 10 | 14,965.30 | *134,687.71* |
| கணினிகள் | 195,774.81 | 125,370.00 | 321,144.81 | 25 | 48,943.70 | *272,201.11* |
| அலுவலக உபகரணங்கள் | 21,111.89 | | 21,111.89 | 25 | 5,277.97 | *15,833.92* |
| நிஅச பெயர்ப் பலகை | 31,584.96 | | 31,584.96 | 20 | 6,316.99 | *25,267.97* |
| கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் | 455,855.80 | (48,773.00) | 407,082.80 | 20 | 81,416.56 | 325,666.24 |
| **தொட்டு உணர முடியாத சொத்துக்கள்:** | | | | | | |
| கணக்கீட்டு மென்பொருட்கள் | 34,390.58 | | 34,390.58 | 10 | 3,439.06 | 30,951.52 |
| மொத்தம் | 1,075,549.95 | 76,597.00 | 1,152,146.95 | | 197,795.36 | 954,351.59 |

**நிலையான**

**2 சொத்துக்கள்**

| தொடரிலக்கம் | வங்கி | காலம் | கணக்கு இலக்கம் | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| 1 | HDFC வங்கி | 02 வருடங்கள் | 74891 | 5,000,000.00 | 5,000,000.00 |

**3 இடர் கடன்**

ரீ.ஜீ.பிரனாந்து 224,485.00

ஆர்.எம்.என். ரத்னாயக்க 96,180.00

320,665.00

**4 கிடைக்கப் பெற வேண்டியவை**

நிலையான வைப்புக்களின் வட்டி

இலக்கம் 81786998 6,562.50

இலக்கம் 81787043 6,718.75

இலக்கம் 74891 916,666.67

செயலமர்வுகளின் வருமானம் 1,500.00

முறைப்பாடுகளுக்குரிய கட்டணங்கள் 25,000.00

956,447.92

5. பணம் மற்றும் பணத்திற்கு

ஈடானவை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வங்கியில் உள்ள பணம் | | | | 953,060.17 |
| | கையிருப்பில் உள்ள பணம் | | | | 0 |

<u>நிலையான வைப்புக்கள்</u>

| தொடரிலக்கம் | வங்கி | காலம் | கணக்கு இலக்கம் | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| 1 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 3 மாதங்கள் | 80945401 | 105139.35 | |
| 2 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 7 நாட்களுக்குரிய வைப்புக்கள் | 80945454 | 154,022.56 | |
| 3 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 3 மாதங்கள் | 81786998 | 500,000.00 | |
| 4 | இலங்கை வங்கி, நாராஹேன்பிட்ட | 6 மாதங்கள் | 81787043 | 500,000.00 | |
| | | | | | 1,259,161.91 |
| | | | | | 2,212,222.08 |

6 **சேரல் செலவுகள்**

| தொடரிலக்கம். | செலவுகள் | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| 1 | கணக்காய்வுக் கட்டணங்கள் | 352,229.00 | |
| 2 | கட்டுப்பாட்டுச் சபைக் கொடுப்பனவுகள் | 8,928.00 | |
| 3 | மேலதிக நேரக் கொடுப்பனவுகள் | 6,219.28 | |
| 4 | தபால் மற்றும் மின்சார செலவுகள் | 3,221.84 | |
| | | | 370,598.12 |

7 **செலுத்த வேண்டிய செலவுகள்**

| | |
|---|---|
| 2014 இறுதிக் கூற்றிற்கு அமைய | 278,176.00 |
| சரியான மீதி | 254,723.00 |
| வேறுபாடு | 23,453.00 |
| | |
| 2017 மிகைக்கான சீராக்கல் | 14633.00 |
| உறுதியற்ற கணக்குகள் | 8,820.00 |
| மொத்தம் | 23,453.00 |

| | | |
|---|---|---|
| உறுதியற்ற கணக்கு | வரவு | 8,819.71 |
| திரண்ட நிதியம் | செலவு | 8,819.71 |

**8. வைப்புக்களின் இலக்கம்**

| | | ரூ. | ரூ. |
|---|---|---|---|
| 1 | 74890 | 34,166.67 | |
| 2 | 80118497 | 45,578.53 | |
| 3 | 80118896 | 15,594.95 | |
| 4 | 80945472 | 8,521.45 | |
| 5 | 80945401 | 5,139.35 | |
| 6 | 80945402 | 4,022.56 | |
| 7 | கிடைக்கப்பெற வேண்டிய வட்டி | 563,281.25 | |
| | | | **676304.76** |

**9 ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| முறைப்பாடுகளைப் பதிவு செய்வதற்கான கட்டணங்கள் | 35,000.00 | |
| பொதுமக்களுக்கு தகவல்களை வழங்குவதற்கான அறவிடுதல்கள் | 36,400.00 | |
| ஊழியர் கடன் வட்டி | 12,208.84 | |
| முறைப்பாடுகளுக்கான கட்டணங்கள் | 15,000.00 | |
| சம்பளமற்ற விடுமுறைகள் செயலமர்வுகளினாலான வருமானம் | 12,040.20 | |
| ஏனையவை | 54,662.50 | |
| | | **165,311.54** |

**10 செயலமர்வுகளின் தேறிய வருமானம்**

| | | |
|---|---|---|
| வருமானம் | 1,912,500.00 | |
| செலவுகள் | 1,385,240.00 | |
| | | **527,260.00** |

**11** சம்பளங்கள் மற்றும் வேதனங்கள்

| | | |
|---|---|---|
| சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | 798,898.68 | |
| ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை | 165,992.21 | |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புத் தொகை | 41,498.04 | |
| | | **1,006,388.93** |

**12** ஏனைய கொடுப்பனவுகள்

| | | |
|---|---|---|
| தலைவரின் பணிக்குரிய கொடுப்பனவுகள் | 450,000.00 | |
| உப தலைவரின் பணிக்குரிய கொடுப்பனவுகள் | 360,000.00 | |
| பதிற்கடமை மேற்கொள்ளும் செயலாளரின் பணிக்குரிய கொடுப்பனவுகள் | 115,590.00 | |
| பயிலுநர் ஊழியர்களுக்கான | | |
| கணக்காளரின் பணிக்குரிய கொடுப்பனவுகள் | 109,503.00 | |
| கணக்காய்வுக் குழு உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் | 124,000.00 | |
| நி.அ.ச.உறுப்பினர்களின் கொடுப்பனவுகள் | 808,792.00 | |
| வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவுகள் | 280,800.00 | |
| இடைக்கால / சீராக்கல் கொடுப்பனவுகள் | 265,203.42 | |
| விஷேட கொடுப்பனவுகள் | 41,239.25 | |
| பயிலுநர் ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் | 108,250.00 | |
| | | **2,663,377.67** |

**வழங்கல்கள்**

13 **ஏனையவை**

| | | |
|---|---|---|
| லெமினேடிங் | 17,775.00 | |
| அச்சுப் பதிப்பு மற்றும் புத்தகம் கட்டுதல் | 27,250.62 | |
| மொழிபெயர்ப்புக் கட்டணங்கள் | 714.00 | |
| பிரச்சாரம் | 103,712.75 | |
| பல்வேறு செலவுகள் | 7,180.88 | |
| | | 156,633.25 |

## நில அளவைகள் சபை

### 2017-12-31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்

**1. பொதுக் கணக்கீட்டுக் கொள்கைகள்**

1.1. தயாரிக்கும் அடிப்படை

இலங்கை அரச துறையின் கணக்கீட்டுத் தரப்படுத்தல்களுக்கும் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அமைய நிதிக் கூற்று தயாரிக்கப்படும்.

1.2. நிதிக் கூற்று சேரல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டு உள்ளது.

1.3. நிதிக் கூற்றானது வரலாற்று ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட செலவின முறைமைக்கு ஏற்ப தயாரிக்கப்படும்.

**2. <u>சொத்துக்களை மதிப்பிடும் அடிப்படை</u>**

2.1. நிலையான சொத்துக்கள் வெட்டி நீக்கப்பட்ட பெறுமதியில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

2.2. தேய்மானம்

நிலையான சொத்துக்களின் தேய்மானம் குறைந்து செல்லும் ரீதி முறையின் கீழ் கடந்த வருடங்களுடன் ஒத்தியங்கும் வகையில் கீழே குறிப்பிடப்பட்டு உள்ள விகிதாசாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டு உள்ளது.

| சொத்துக்களின் வகை | % |
|---|---|
| இயந்திரங்கள் | 20 |
| தளபாடங்கள் | 10 |
| கணினிகள் | 25 |
| அலுவலக உபகரணங்கள் | 25 |
| பெயர்ப் பலகை | 20 |
| கட்டிடங்கள் மற்றும் கருவிகள் | 20 |
| கணக்கீட்டு மென்பொருட்கள் | 10 |

## 12. கணக்காய்வாளர் நாயகம் அவர்களின் அறிக்கை 2017

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

**AUDITOR GENERAL'S DEPARTMENT**

தலைவர்,

நில அளவைச் சபை

**நில அளவைச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

நில அளவைச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவைச் சபை அதிகாரச்சட்டத்தின் 57(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சி) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று சபையின் தலைவருக்கு 2018 ஏப்ரல் 27 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 **நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததான (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நில அளவைச் சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயற்பாட்டினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் 25 ஆம் பந்திக்கு முரணாக, முதலீட்டு முதிர்வுகள் ரூபா 1,000,000 தொகை மூலதன மாற்றத்திற்கான சரிப்படுத்தலொன்றாக குறிப்பிட்டிருந்ததுடன், நடைமுறை ஆண்டில் கணனிகளின் கொள்வனவுக்கு செலவிடப்பட்ட ரூபா 125,370 தொகையொன்றில், முன்னைய ஆண்டின் மிகை செலுத்துகைகளுக்கான ரூபா 48,775 தொகையான மீள்நிதியிடலினை சரிப்படுத்துவதன் மூலம் காசுப்பாய்ச்சல் கூற்றில் மொத்தப் பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

ஊழியர் பணிக்கொடை தொடர்பில் சபையினால் கணக்கீட்டுக் கொள்கையொன்று இனங்காணப்பட்டிருக்காததுடன், ஊழியர் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

காணி அளவைச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு தவறான நடத்தைகளின் மீது அளவையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 62,500 தொகையான அபராதங்கள் நிலுவை வருமானம் மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 47,500 தொகையொன்றினால் குறைத்துக் குறிப்பிடப்பட்டிருந்ததுடன் ரூபா 15,000 தொகையொன்றாக கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

2.3 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றிற்கான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டம் | |
| (அ) 12(1) ஆம் பிரிவு | பதிவு செய்யப்பட்ட அனுமதிப் பத்திரத்தையுடைய நிலஅளவையாளர் ஒருவரால் தயாரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட குறித்த வகைகளில் ஆரம்ப திட்ட வரைபடம் அல்லது வரைபடத்தின் பிரதிகள் தரவுத் தளமொன்றை (Data Base) தாபிப்பதற்காக வைப்புச் செய்யப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 43(1) மற்றும் (2) ஆம் பிரிவு | சபையினால் சகல பதிவுசெய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய நிலஅளவையாளர்களின் பட்டியலொன்றை வர்த்தமானியில் வெளியிட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரத்தையுடைய 1,004 நிலஅளவையாளர்கள் இருந்தும், 2017 மார்ச் 23 இன் 2011/24 ஆம் இலக்க வர்த்தமானியில் 841 நிலஅளவையாளர்களின் பெயர்கள் மாத்திரமே பிரசுரிக்கப்பட்டிருந்தது. |

4

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதி விளைவுகள் ரூபா 1,013,039 பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டதுடன் அதனோடொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 834,430 ஆகக் காணப்பட்டமையினால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 178,609 தொகையான வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. சம்பளங்கள் மற்றும் படிகள் ரூபா 186,294 தொகையொன்றினால் அதிகரித்தமை இந்தப் பற்றாக்குறைக்கு பிரதான காரணமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்கையில், 2012 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக நிதிசார் மிகையொன்றினை சுட்டிக்காட்டியிருந்தது. எவ்வாறாயினும், 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் அது பற்றாக்குறையொன்றாகக் காணப்பட்டிருந்ததுடன் 2017 ஆம் ஆண்டில் அந்தப் பற்றாக்குறை ரூபா 1,013,039 தொகையொன்றுவரை அதிகரித்திருந்தது. மீண்டும் நிதிசார் விளைவுகளுக்கான ஊழியர்களின் ஊதியங்கள் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீதான பெறுமானத்தேய்வு என்பவற்றை சரிப்படுத்துகையில், 2012 ஆம் ஆண்டில் ரூபா 3,325,057 தொகையாகக் காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆம் ஆண்டில் தளம்பல்களுடன் ரூபா 2,878,815 தொகையொன்றாகக் காணப்பட்டிருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சபையின் நடைமுறை விகிதம் 1.19 மற்றும் 0.93 ஆகக் காணப்பட்டிருந்தது. ஆதலால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் தாழ்ந்த மட்டமொன்றில் தொடர்ந்திருந்தது. மீளாய்வாண்டில் குறுங்கால நிலையான வைப்புக்களினை காசாக மாற்றியமைத்து செலவினம் ஏற்பட்டமை இது தொடர்பில் பிரதான காரணமாகக் காணப்பட்டிருந்தது. காசு மற்றும் காசுக்குச் சமனானவை 2016 ஆம் ஆண்டில் 81 சதவீதத்தினையும் 2017 ஆம் ஆண்டில் 63 சதவீதத்தினையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தமையினால், நடைமுறைச் சொத்துக்களின் பாரியளவு தொகையான சொத்துக்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

அளவை தொழில் மற்றும் அதன் பிரயோகம் என்பவற்றை முறையாக பேணுவதற்கும், தொழில்துறையினர் எதிர்பார்க்கும் தொழில்சார் ஒழுங்குகள் மற்றும் நெறிமுறைகள் நியமங்களுக்கு இணங்கும் வகையில் பயிற்சியொன்றை அல்லது கல்வியினை தொழில்துறையில் நுழைபவர்களுக்கு வழங்குதலின் மூலம் அதனால் தொழில்துறையில் ஈடுபடுபவர்கள் தொழிலில் நிலைத்திருத்தல் மற்றும் உயர் நியமங்களை பேணிச்செல்வதனை உறுதிப்படுத்தல் என்பன 2002 இன் 17 ஆம் இலக்க நில அளவை அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் சபையின் நோக்கங்களாகும்.

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், செயற்பாடுகளினை நிறைவேற்றுவதன் செயல்முன்னேற்றம் தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் அளவையாளர்களின் தொழில்சார் துர்நடத்தையினை தீர்ப்பதற்கு பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 125 ஆகக் காணப்பட்டிருந்த போதிலும், ஆண்டில் 96 முறைப்பாடுகள் அல்லது 77 சதவீதம் மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டில் 06 தொழில்சார் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களினை நடாத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 03 நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(இ) உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு சமூக பாதுகாப்புத் திட்டமொன்று மற்றும் நலன்புரி மற்றும் விளையாட்டு வசதிகளினை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அவைகள் அமுல்படுத்தியிருக்காததுடன், சபையின் நிர்வாக செயற்பாடுகளுடன் தொடர்புடைய வேண்டப்படும் விதிகளேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட 2005 ஆம் ஆண்டின் பின்னர் நிலஅளவையாளர் ஒருவர் சபையில் பதிவுசெய்யும் போது அறவிடப்படுகின்ற ரூபா 3,500 தொகையான பதிவுக் கட்டணங்களும் மற்றும் 2010 ஆம் ஆண்டின் பின்னர் வருடாந்த அனுமதிப்பத்திரங்களுக்காக நிலஅளவையாளர்களிடமிருந்து

அறவிடப்படுகின்ற ரூபா 2,500 தொகையான கட்டணங்களும், மேலதிகமாக டிசெம்பர் 31 ஆந் திகதி வரை திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த அனுமதிப்பத்திரங்களினை விநியோகிப்பதற்கு அனைத்து அளவையாளர்களும் நிலஅளவை அதிகாரசபையின் கீழ் பதிவுசெய்ய வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், வருடாந்த அனுமதியினைப் பெற்றுக்கொள்ளாது அளவை செயற்பாட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ள நபர்களினை இனங்காண்பதற்கு அல்லது அவ்வாறான செயற்பாடுகளினை தவிர்ப்பதற்கு சபையினால் சட்டங்கள் மற்றும் விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

முதிர்வுத் திகதிக்கு முன்னர் ரூபா 500,000 பெறுமதியான இரண்டு நிலையான வைப்புக்களினை காசாகமாற்றியதன் மீது ரூபா 14,375 தொகையான வட்டி வருமானத்தின் நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

4.4 பதவியணி நிர்வாகம்

2002 இன் 17 ஆம் இலக்க நிலஅளவைச் சட்டத்தின் 38(இ) பிரிவின் பிரகாரம் சபையின் நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு போதியளவான உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் நியமிக்கப்படல் வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், 2018 மார்ச் 31 வரை இரண்டு எழுதுனர்கள் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். ஆகையினால், உத்தியோகத்தர்களின் பற்றாக்குறை முரண்பாடுகளினை தீர்ப்பதற்கு மற்றும் ஆவணங்களின் நாளதுவரையாக்கல் செயற்பாடுகளுக்கு தடையொன்றாகக் காணப்பட்டது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 பாதீட்டு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதீடாக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்களுக்கும் மற்றும் உண்மையான வருமானம் மற்றும் செலவினங்களுக்குமிடையே 03 வருமானத் தலைப்புக்கள் மற்றும் 07 செலவின விடயங்களில் 21 சதவீதம் தொடக்கம் 386 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்பாடுகள் அவதானிக்கப்பட்டமையினால், பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

(ஆ) உத்தியோகத்தர்களின் பயிற்சிக்கு பாதீட்டின் மூலம் ரூபா 100,000 தொகை ஏற்பாடுகள் கிடைக்கக்கூடியதாக மேற்கொள்ளப்பட்டிருந்தபோதும், பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) மூலதன சொத்துக்களின் கொள்வனவுக்கு வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் ரூபா 380,000 தொகையொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதிலும், ரூபா 254,630 தொகையொன்று அல்லது அதன் 67 சதவீதம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறு சேமிக்கப்பட்டிருந்தது.

5.2 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வு பந்திகள்

2009 சனவரி இலிருந்து சபையின் செயலாளர் பதவி வெற்றிடமாக காணப்படுவதுடன் அப்பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரினை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு 2012 யூலை 05 ஆம் திகதி பொது முயற்சிகள் குழுவினால் கட்டளையிடப்பட்டிருந்தது. அந்த ஆட்சேர்ப்புக்கு செய்தித்தாள் விளம்பரங்களினை வெளியிடுவதற்கு மீளாய்வாண்டில் ரூபா 99,288 தொகையொன்று செலவிடப்பட்டிருந்த போதிலும், 2018 மார்ச் 31 வரையிலும் அந்த பதவிக்கான வெற்றிடத்தினை நிரப்புவதற்கு தவறியிருந்தது.

5.3 வருடாந்த ஆண்டறிக்கைகளினை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2015 மற்றும் 2016 ஆண்டுகளுடன் தொடர்புடைய சபையின் வருடாந்த அறிக்கைகள் 2018 மே 31 வரையிலும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

5.4 சமூகப் பொறுப்பை நிறைவேற்றல்

அனுமதிபெற்ற நிலஅளவையாளர்களினால் அளவிடப்பட்டு தயாரிக்கப்பட்ட திட்டங்களின் பிரதிகளினை அவற்றை பொது மக்களினால் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில், சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

8

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கணக்கீடு | சில இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களைப் பின்பற்றுவதில் கணக்கீட்டு குறைபாடுகள் தொடர்ந்தும் காணப்படுகின்றன. |
| (ஆ) வருமானக் கட்டுப்பாடு | பட்டியல்கள் திருத்தஞ் செய்யப்படாதிருக்கின்றமை. |

ஒப்பம்/எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

9